# ஆனந்தக் கூத்து

......................திரு வி. கலியாண சுந்தரனார்......................



ஆசிரியர்: திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் "உள்ளொளி" என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதிலே மனத்தைப்பற்றிய அரிய கருத்துக்கள் பல உள. அம்பலக்கூத்தனின் ஆனந்த நடனம்பற்றி அவர் குறிப்பிடுவதை இங்கே வெளியிடுகிறோம்.

நடராஜன்

ஒரு காட்சி வரப்போகிறது. அஃதும் ஓவியக் காட்சியே. அது கூத்தோவியம். ஓவியத்திற் கூத்தா? கூத்தில் ஓவியமா? கூத்தாடி ஓவியம் எப்படியுமிருக்கும்.

எல்லாவற்றையுங் கடந்து உருவற்றதாயுள்ள கடவுள் நிலை போக்குவரவற்றது; அசைவற்றது; தொழிலற்றது; அதற்குக் கூத்தேது? இயற்கையை உடலாகக் கொண்டு அதன் கூறுகள் எல்லாவற்றிலும் வீற்றிருக்கும் கடவுள் நிலைக்குத் தொழில் காணே உண்டாகும். அதற்குத் தொழில் இல்லையேல் இயற்கை எங்ஙனம் இயங்கும்? உயிர்களைத் தன்னைப்போலாக்கவே கடவுள் இயற்கையை உடலாகத்தாங்கி அதை இயக்குகிறது. ஆனால் அது தொழிலுடையதாகிறது. அத்தொழில் ஐந்து வகை. அவை ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன.

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைய புவனமும் எண்ணீங் குயிருந்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன் அமைத்தகைத் தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் அமைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையு மறைத்துநின்
றூட்டுவ தாகுநின் ஊன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே.

இது குமரகுருபரர் வரைந்த ஐந்தொழில் எழுத்தோவியம்.

ஐந்தொழிலும் நிகழ அப்பன் கூத்தாடுகிறான்; நடம் புரிகிறான்; நடராஜனாகிறான். அவன் கூத்து எவ்விடத்தில் நடைபெறுகிறது? எங்கும் நடைபெறுகிறது. அக்கூத்து உயிரில்-உள்ளத்தில்-உணர்வில் நடைபெறுகிறது; உலகில்-உயர் அண்டங்களில்-அண்டபகிரண்டங்களில் நடைபெறுகிறது. அணுவில்-அணுவுக்கணுவில்-நடைபெறுகிறது; எங்குமெங்கும் நடைபெறுகிறது. அத்திருநடம் இல்லையேல் உலகில் இயக்கமேது? உயிர்க்கு வாழ்க்கையேது?

காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீகால் நீள்வா னிடையாடி
நாளுற அம்பலத் தேயாடு நாதனே.
அம்பல மாவது அகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே.
வேதங்க ளாட மிகுவா கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்ட மேழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானானந்தக் கூத்தே.
ஆண்ட மெய்ப்பூங்கொடி பிண்ட மெய்ப்பூங்கொடி
தெண்டிரை சூழும் தலைச மெய்ப்பூங்கொடி
எண்டிசை சூழும் ஆலங்க மெழுக்கொடி
ஆண்டனை மடநுசையும் ஆலயம் தாமே.
எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே.

இவை திருமூலர் நடனப் பாக்கள்.

அணுவுக்கு அணுவிலும் அண்டபகிரண்டங்களிலும் எங்கும் எங்கும் ஓயாது கூத்தியற்றும் கூத்தப்பெருமானை - நடராஜனை - எண்ணத்துட் பார்ப்போம். *அவன் அடங்கானல்லன். அவனை எப்படித் தியானிப்பது? வழிபடுவது? பெருங்கூத்தன் - நடனவள்ளல் - புலவனை ஓவியத்தில் நிறுத்திக் காட்சியளிக்க உளங்கொள்கிறான். அவன்றன் கருணையே கருணை! நடராஜ ஓவியத்தைக் காணுங்கள். கமழுமன்னே ஓவியம் நிற்கிறது, ஓவியத்தில் கூத்து! கூத்தில் ஓவியம்!

நடராஜன் ஒருவன். அவன் பல கோலந் தாங்குகிறான். அவைகளில் இரண்டினமீது கருத்துச் செலுத்த விரும்புகிறேன். ஒன்று திருவாலங்காட்டுப் பெருங்கோலம்; மற்றொன்று தில்லைத் திருக்கோலம். திருவாலங்காட்டில் நடராஜன் தூக்கிய கால் வானோக்கி நிற்கிறது; சிதம்பரத்தில் அவனது கால் 'எடுத்த பொற்பாத'மாகவே குஞ்சிதபாதமாகவே - இருக்கிறது.

திருவாலங்காட்டில் ஆண்டவன் புரிவது ஊர்த்துவ தாண்டவம். அத்தாண்டவத்தின் எதிரில் ஒரு கோரவுருவம் நிற்கிறது. அதன் தலைமயிர் பரப்பு; கண்களில் தழல்; வாயெல்லாம் இரத்தச்சேறு; உடலில் படமெடுத்த பாம்பணி; வயிறு பூதம்; கை கால்களில் கூரிய நீண்ட வாள் நகங்கள் - என்ன கோரம்! இக்கோரம் காளி என்று சொல்லப்படுகிறது. இக்காளியுடன் ஈசன் வாதுநடம் புரிகிறான் என்று புராணம் புகல்கிறது. புராணம் எதையுங் கதையாகப் புனைந்து சொல்லும். அது நிற்க. கோர காளிரூபம் எதற்கு அறிகுறி? கொள்ளை - கொலை - போர் முதலிய கோரங்களைக்கொண்ட புரட்சிக்கு (Bloody Revolution) அறிகுறி.

தில்லையில் அப்பன் புரிவது ஆனந்தநடனம்; இன்பக்கூத்து. அப்பன் நோக்கு ஒருபால் சென்றுகொண்டிருக்கிறது. எப்பால்? அங்கே நிற்பதென்னே! ஓர் அழகிய ஓவியம் - பெண்ணோவியம். அவ்வோவியத்தைக் காண இரண்டு கண் போதவில்லை; கருத ஒருள்ளம் போதவில்லை. அம்மை சிவகாமி நிற்கிறாள். அம்மை சிவனை-ஐயனைக் காதலிக்கிறாள்! என்ன காதல்! காரிட்ட ஆணவக் கருவறையிற் கட்டுண்டு கிடக்கும் உயிர்களையெல்லாம் ஈடேறச் செய்தல் வேண்டும் என்னுங் காதல். அதற்கு அப்பன் அம்மையை நோக்குகிறான். நோக்கின் பொருள் யாது? 'காதலி! உன் காதல் நிறைவேற உன் துணை வேண்டும்' என்பது. *அப்பன் நோக்கம் அம்மையின் காதலில் ஒன்றி ஆனந்தக் கூத்தாகியது. இருளிலிருந்த உயிர்கள் தநுகரண புவன போகங்களைப் பெறுகின்றன; விழிப்படைகின்றன. தில்லை சிவகாமி எதற்கு அறிகுறி? படைப்பாதி தொழில்களின் நிகழ்ச்சிக்கு (Evolution) அறிகுறி.

போராட்டம்

காரிட்ட ஆணவக் கருவறையில் கிடந்த உயிர்கள் அம்மை அப்பன் அருளால் தநுகரண புவனங்களைப் பெற்றுச் சிறு விடுதலை அடைகின்றன. தங்களுக்குத் தநுமுதலியவற்றை வழங்கிய அம்மை அப்பனை மறவாது, அவனது அருட்கொடையை மறவாது நினைந்து நினைந்து பெண் ஆணுடனும் ஆண் பெண்ணுடனும் வாழ்ந்து, அறவழி நின்று ஒழுகின், உயிர்கள் பெரிதும் என்ன செய்கின்றன! தாங்கள் பெற்ற தநுமுதலியன அம்மை அப்பன் கொடை என்பதை மறந்து, ஆணவத்தால் செருக்குச் சமோதர மேயமிழந்து, அதர்மவழிகளில் நுழைகின்றன. அதனால் உலகில் கொள்ளை — கொலை — போர் — புரட்சி முதலியன விளைகின்றன. இப்பொழுது நடைபெறுவரும் உலக யுத்தத்திற்கு—உலகம் என்றானுங் காணாத மகா யுத்தத்திற்கு - அடிப்படையான காரணம், மக்கள் பலர் ஆண்டவனையும் அவன் கொடையையும் மறந்தமையாகும். இவ்வுண்மை இன்று உலகுக்கு விளங்காதொழியினும் நாளடைவில் விளங்காமற் போகாது.

உயிர்களின் அறியாமை காரணமாக நாளுக்குநாள் உலகம் போராட்டத்திற்கு இரையானால், பின்னை அஃது எப்படி வாழ்வுபெறும்? போராட்டமென்னும் பலியுண்டபடி ஆண்டவனது அருட்சத்தியாகிய சிவகாமி - சமதாய - விடமாட்டாள். அவள் உலகை வளர்க்குஞ் சக்தி. உலகம் போராட்டத்துக்கே இரையானால் அஃது அழிந்துபடுமன்றோ? உலகம் அழிந்துபட்டால் இறைவனுக்கு என்ன வேலை? அவனது அருட்சக்திக்கு என்ன வேலை? உலகம் போராட்டத்தால் அழியுமாறு இறைவனது அருட்சக்தி அதை விடாது. உலகுக்கு நலஞ்செய்வு கொளுத்தப்போகும் புரட்சியும் இறைவன் சக்தியால் அளவிலேயே உண்டாகப்பெறும், குணமேற்றல் முதலியனவும் ஆண்டவன் அருளாலேயே நிகழ்கின்றன என்று கொள்க. [1] "மண்ணிடத்தும் கடலிடத்தும் வானிடத்தும் குணமேறிதல் - அண்ணலுனை மறந்த உயிர்க்கு அருளேட்டுங் கருணை மழை" என்று யானும் பாடியுள்ளேன்.

திருவாலங்காட்டுத் தெய்வவுரு ஊர்த்துவ தாண்டவம் புரிகிறது. ஒருகாலை உயரத் தூக்கி அவ்வுரு நிற்கிறது. எதிரில் இரத்தப் புரட்சிக்கு அறிகுறியாகக் கோரக்காளி நிற்கிறாள். கோரக்காளியும் சக்தியின் கூறினளே. கோணிச் செல்லும் உலகில் புரட்சியைக் கிளப்புவது அவள் கடமை. உலகத் திருத்தத்தின் பொருட்டு அவள் அளவிலேயே கடனாற்றுவள். அளவு மீறிக் கடனாற்ற அவள் முற்படுவாளேல், உயரத் தூக்கியுள்ள இறை திருவடி வாளாவிராது. அது காளியின் தலைமீது விழுந்து, அவளை மிதித்து நசுக்கி [2]அவள் வேகத்தைக் கெடுத்துவிடும். திருவாலங்காட்டுத் தெய்வ ஓவியம், "காளி! உலகம் அறத்தை மறந்து, பாழ்படுங் காலத்து, அதை ஒழுங்குபடுத்த உன் கடமையை நீ செய்யலாம். அக்கடமை வரம்புக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும். வரம்புமீறி உன் பெருமாக்கால் தலைவிரித்தாட முனைந்தெழுந்தால், உயரத் தூக்கியுள்ள இக்கால் உன்னை மிதித்து அடக்கி ஒடுக்கிவிடும். எச்சரிக்கை!" என்று புரட்சிக்காளிக்கு அறிவுறுத்தும் வண்ணம் இருத்தலைக் கருதுக. காளியின் எழுச்சிபால

தொடர்ச்சி 6-ம் பக்கம்

* தாளொன்றால் பாதாளம் ஊடுருவத் தண்விசும்பில்
தாளொன்றால் அண்டங் கடந்துருவித்—தோளொன்றால்
திக்கனைத்தும் போக்கும் திறமைகாளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம். —நக்கீரர் (கைலைபாதி காளத்திபாதி)

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரில் வான் திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்று அரங்கு.—காரைக்காலம்மையார் (அற்புதத்திருவந்தாதி)

* தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவார்காண் சாழலோ.
—திருவாசகம்: (திருச்சாழல் 9)

1 பொதுமை வேட்டல்: 40;10.
2 வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க—திருவாசகம்: சிவபுராணம் 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிதம்

### திரு. சோமசுந்தர உபாத்தியாயர்

ஐயா,

தங்கள் இந்துசாதனம் சோமவார வெளியீட்டில் (11.12.44) கடுவில் திரு. சோமசுந்தர உபாத்தியாயரின் உடற்பிரிவைப்பற்றிய செய்தியை அறிந்து மிகவுங் கவல்கின்றேன்.

உபாத்தியாயர் அவர்களை நான் காணுங்காலங்களில் எல்லாம் உலகிலையாமை யாக்கை நிலையாமை முதலியவற்றைப்பற்றியே அறிவுறுத்தி வந்தார்.

மானிடதேகமடைதலரிது அரிதிற் பெற்ற உடல் அரன் பணிக்கானது என நன்மொழிகள் இயம்பி வந்ததோடு தாமுஞ் செயற்கையிலுங் காட்டிவந்தார்.

விபூதி உருத்திராக்கமாகிய சிவ சின்னங்கள் மேனியிற்றிகழ சிவபிரான் திருவடிக்கண் நெஞ்சழுந்த அறவழியே இல்வாழ்க்கையைச் சிறப்பாக நடத்தி ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

சேர் பொன் இராமநாதன் அவர்களிடத்தும் சீமாட்டி லீலாவதியிடத்தும் பட்டற்ற பக்தியு மன்பும் பூண்டிருந்தார் என்பது அவர் தமது தொழிலிலிருந்து ஓய்வெடுத்த பின்னரும் நாடோறும் இராமநாதன் கல்லூரிக்குச் சென்று மாணவிகளின் கல்வி ஒழுக்குகளைப் பற்றிக் கண்காணித்து வந்தமை நன்கு வெளிப்படுத்துகின்றது.

யாழ்ப்பாணஞ் செய்த தவமே யுருவெடுத்தன்ன புண்ணிய வடிவுடன் பல்லாயிரமடியாருக்கு நல்லருள் பாலித்து வருவதோடு அவர் தம் பழங்குடில் தொறுஞ் சென்று பழவினை தீர்த்து வரும் குருவடிவிடத்தில் அவர்கொண்ட பக்தி அக்குருமணியின் திருப்பெயரைக் கூறியவுடனே அவர் கண்களிலிருந்து ஒவ்வொன்றாய், முத்துக்களைப் போல, கீழ் விழுகின்றதோடும் நீர்த்துளிகளே காட்டிநின்றன.

சாத்துவிகம் நிறைந்த குணத்தாரெனக்காட்டும் வெண்முடியும வெள்ளாடையும் மேனியிலே வெண்ணீறும் கண்மணியும் கையிலே பழங்குடையும், காலிலே செருப்பும் பூண்டு, மிருதத புல்லும் சாயாத மென்னடையுடன் பொருந்திய அவரது கோலம் இதனை யான் எழுதும்போதும் முன்னிற்கின்றது!

ஒருநாள் இராமநாதன் கல்லூரியில் நடந்த 'இராமநாதன் திருநாள்' உற்சவத்தில் சைவப்பயிர் சருவிருந்து தக்க காலத்தில் மூலைத்து சிவமணம் எங்கும் பரப்பவிருக்கும் சிறுமணிகளாகிய பெண்மணிகள் சிவநாம பாராயணத்தோடும் ஒவ்வொருவரும் ஒவ்வோர் கலைமகள் தாமேயெனக் கையிலேந்திய வீணையோடும் வரிசையில் முன்செல்ல, தாம் நெடுநாள் பயின்றுவந்த திருக்கோலத்தோடும் உபாத்தியாயாவர்கள் முன்சென்று சோபிற் சந்நிதானத்தில் நல்லொழுக்கணர் தம்மடியார்க்குமடியேன் என்ற திருப்பதிகத்தைப் பிள்ளைகளோடு பண்முறைப்படி பக்தி சொரியப் பாடிநின்ற கோலத்தையும் யாம் மறப்பதற்கில்லை.

உபாத்தியாயர் அவர்கள் உடல் நீங்கச் சில மாதங்களுக்கு முன்பே தமது பிரிவை அறிந்துவிட்டார் என்பது அவர் எனக்கெழுதிய ஓர் கடிதத்தில் உள்ள வசனங்கள் காட்டிநிற்கின்றன,

'முன்னேதானே எனக்குள்ள இரத்த அமுக்கவியாதி (Blood Pressure) யோடு தொண்டைப்புண் வியாதியுஞ் சேர்ந்துகொண்டதால் இனி என் தேகநிலை நன்மைக்கில்லை. எல்லோருக்குஞ் சுகஞ் சொல்லுங்கள்! அவர் நோதலோடு எல்லாருக்கும் சுகஞ் சொல்லிப் பணத்தை முடித்துக்கொண்டார்.

ஆம், சாதலும் பிறத்தலும் இயற்கையன்றோ ஆதலின் நோதலெற்றிற்கு என மனதைத் தேற்றுவோம். இதற்குச் சான்றாக திருத்தக்கதேவன் உச்சந்தன் வாயால் அவன் தேவி விசையைக்குக் கூறுவதாவது.

'தொல்லைநம் பிறவியெண்ணிற் றொடுகடன் மணலுமாற்றா
வெல்லையவற்று ளெல்லா மேதினம் பிறந்து நீங்கி

## கடிதம்

ஸ்ரீ. ஆ. திருப்பாவிசங்கங் காரியதரிசி அவர்கட்கு,

ஐய!

தங்களால் நடாத்தப்பட்ட பண்டித பாலபண்டித பிரவேசபண்டித பரீக்ஷைகளின் பெறுபேறு, ஏழுமாதங்கள் சென்றும் இன்னும் வெளிவரவில்லை. அடுத்த ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்குங் காலமும் சமீபித்துவிட்டது. பரீக்ஷை எடுத்தோரனைவரும் சித்தியெய்தவில்லையா, பாசிதா, அறியேம் தமிழன்னையை இவ்வாறு மானபங்கப்படச் செய்வதை நினைந்து வருந்துகின்றேம்:- இயன்றது செய்க,

தமிழாசிரியன்.

## விளம்பரம்

1944ம் ஆண்டு மார்கழிமாதம் 6ந் திகதி (20-12-44) புதன்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் கோவிலில் திருவெம்பாவை நடைபெறும். அன்று முதல் 10 நாட்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும் மேளக்கச்சேரிகளும் சங்கீதக் கச்சேரிகளும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறிவிக்கின்றேன்,

இங்ஙனம்,
கோவில் சொந்தக்காரன்,

Mis 176 18—21-12.44.

## உபஉணவுப்பொருள் வினியோகம்

இதன்கீழ்க் குறிப்பிடும் சாமான்கள் காட்டியுள்ள வினியோகப்படி கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர்ந்த மற்றும் யாழ்ப்பாண டிஸ்திறிக் பிரிவுகளில் உள்ள சாமான் வாங்குபவர்களுக்குக் கொடுக்கப்படும்,

ஒரு ஆளுக்கு 4 கிழமைக்கு

1. கடலைப்பருப்பு 1 அவ
2. கசாலைப்பருப்பு $2\frac{1}{2}$ அவு
3. துவரம்பருப்பு $\frac{1}{2}$ அவு
4. பாசிப்பயறு 1 அவு
5. மல்லி கால் அவு
6. புளி கால் அவு
7. மஞ்சள் கால் அவு

E குணரத்தின,
வடமாகாண ஏசண்டருக்காக.

யாழ்ப்பாணம் கச்சேரி,
14-12.44,

G 93 18.12.44.

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

செல்லுமக் கதிகடம் முட்சேரலஞ்
சேர்ந்தின்ற
வில்லினு ளிரண்டு நாளைச் சுற்றமே
யிரங்கல் வேண்டா"

என்றாலும் பேயோடாயினும் நட்புற்றபின் பிரிதலரிதென்பர் பிரியாது தான் நிற்கும் பெற்றியுமில்லேம்!
மணமலியுங் கடப்பமலர் மார்பா!
ஆறுமுகவா!
பன்னிரண்டு வாகா வேதக்—கணமலியுஞ் செழுஞ

சிலம்பு புலம்பு பாதா! கன்னியர்கள் மணவாளா! கதிர்வேற்கையா தணிகைமலை யமருளுற்றே! செந்தூர் வாழவே! நல்லுருவ கதிர்காமத்தையா! மெய்யாருணரு திருச் சோமசுந்தரனுயிர்க்கடி நிழலைக் கொடுப்பாயெந்தாய் என்று எம்பெருமானை வணங்கி, இந்தப்பெரியாரின் பிரிவால் வருந்தும் மக்களுக்கும் அம்முருகன் ஆறுதலைக் கொடுப்பானென அவன் மலரடிகளை வணங்குகின்றேன்.

க. வேலுப்பிள்ளை.

கண்டி
13—12—44.

# ஆனந்தக் கூத்து

3-ம் பக்கத் தொடர்ச்சி

பழுதுற்ற உலகை மீண்டும் பண்படுத்துவது இறைவனது அருட்சக்தி. இதைக்குஞ்சிதபாத நடராஜ ஓவியமும் உணர்த்தா நிற்கின்றன. இந் நடராஜ ஓவியத்தின் கருணை நோக்கும், சிவகாமி ஓவியத்தின் காதல் நோக்கும் என்ன அறிவுறுத்துகின்றன என்று ஆழ்ந்து சிந்திக்க உண்மை விளங்காமற் போகாது.

தேன்புக்க தண்பணை சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்பக்கு நட்டம் பயின்றிலனேல் தாணியெலாம்
ஊன்புக்க வெற்காளிக்கு ஊட்டங்காண் சாழேலோ.

இது மாணிக்கவாசகர் திருவாக்கு இதில் திருக்கூத்தின் உள்ளம் விளங்குதல் காண்க.

### பயன் கருதாமை

நடராஜன் ஆணவமில்லாதவன்; மூப்பே யில்லாதவன். அன்பே அவன்; அவனே அன்பு. அன்பின் இயல்பென்னை? பிறர் துன்பங்களையத் தொண்டாற்றுவது. நடராஜன் அன்பு மேலீட்டான் ஆனந்தத் தாண்டவம் புரிகிறான். அதனால் ஐந்தொழில் நிகழ்கின்றன. ஐந்தொழிலால் உலகங்கள் நன்முறையில் இயங்குகின்றன, நடராஜன் தொண்டை — அன்புத் தொண்டை — என்னென்று கூறுவது? அவன் தன் தொண்டுக்கு ஏதேனும் பயன் கருதுகிறானா? இல்லை நடராஜன் பயன் கருதாத்தொண்டே நிஷ்காமிய கர்மம் என்பது. இதுவே தெய்விகம் இது கிட்டினால் போதும். இப்பேற்றுக்கு என் செய்தல் வேண்டும்? நடராஜனை வழிபடுதல் வேண்டும். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாவது. நடராஜனை வழிபட வழிபட அவனுடைய இயல்பாகிய பயன் கருதாமை ஆன்மாவைத் தன் வண்ணமாக்கும்.

நடராஜன் அணுவுக்கு அணுவிலும் — அண்டபகிரண்டங்களிலும் — எங்கும் தாண்டவஞ் செய்பவன். அவனை நேரே நினைக்கும் வல்லமை எளிய நெஞ்சுக்கு உண்டோ? என் செய்வது? நடராஜனது அருட்குணங்களை யெல்லாம் பதிவிக்கும்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் வண்ணார்பண்ணை மேற்கு S. R. கந்தையா கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்,

| நம் | வ | ரூ. | நகைவிபரம் |
|---|---|---|---|
| 1487 | 11.2.37 | 10 | வண்கிழக்கு வே. சுப்பிரமணியம் பொன் இரிகல் தோடுசோ1 |
| 1517 | 27.3.37 | 9 | காரைநகர் இ சோமசுந்தரம் பொன் நீலக்கல் மோதிரம் 1 |
| 1570 | 18.9.37 | 10 | கொக்குவில் கிழக்கு ஆ விசுவலிங்கம் இரிகல் பொன் தோடு சோடி 1 |
| 1628 | 22.4.38 | 66 | அராலி கிழக்கு ஆ இராமலிங்கம் பொன்காப்பு சோடி 1 |

விற்பனவு தாரண ஸ்ரீ மார்கழி மீ 16ஃ (20.12.44) சனிக்கிழமை காலை 10 மணி வரையில் எடுபடாதகை யிருக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெந்திஸ் மேஸ்தர்

Mis 172 14&18-12.44.

## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

### டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றாகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின "சாந்தன் றக்ஷா" கற்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கற்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மாதரின் கற்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக்கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்றாறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல இம்போட்கம்பனி
28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

U. 121 12-10.44—

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday. 18, December, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org